

பஜ ரே கோபாலம் — மானஸ, பஜ ரே கோபாலம்
பஜ கோபாலம் பஜிதகுசேலம் த்ரிஜகன்மூலம் திதிஸுதகாலம் (பஜ)
ஆகமஸாரம் யோகவிசாரம் போகஶரீரம் புவனுதாரம் (பஜ)

—ஸ்ரீ ஸதாசிவ பிரும்மம்.

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்
57, மேல டபீர் தெரு, கும்பகோணம்

श्रीकामकोटिग्रन्थावलिः ३

இராமநாதன்
இராமநாதஸ்வாமிகள்
ஈசான்ய மடம்
திருவண்ணாமலை. R. S.
(வ. ஆ. மாவட்டம்)
20-3

॥ श्रीः ॥

॥ श्रीचन्द्रमौलीश्वराय नमः ॥

श्रीमद् आद्यशङ्करभगवत्पूज्यपादैः

विरचितम्

# ॥ श्री भज गोविन्द स्तोत्रम् ॥

(तृतीयं संस्करणम्)



श्रीकामकोटिर्विजयते

श्रीकामकोटि कोशस्थानेन प्रकाशितम्

५७, पश्चिम डबीर् वीथी, कुम्भघोणम्.

1944

[मूल्यम् साधाणकद्वयम्

स्वाम्यं कोशस्थानस्यैव ]

ஸ்ரீ

# பஜ கோவிந்தம்

(மூன்றாம் பதிப்பு)

ஸ்ரீ A. S. நடராஜ அய்யர், பி. ஏ., எம். எல்.

எழுதிய

தமிழ் அனுவாதத்துடனும், குறிப்புரையுடனும்

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய

ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான

**ஸ்ரீ சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்**

அருளிய திவ்விய ஸ்ரீமுகத்துடனும்


கூடியது

ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்

57, மேல டபீர் வீதி கும்பகோணம்

பதிப்புரிமை] 1944 [விலை அணா 2½

20-3



ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய
ஸ்ரீ ஜகத்குரு காஞ்சீ காமகோடி பீடாதிபதிகள்
ஸ்ரீ சந்த்ர சேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

श्रीः

मुद्रा

श्रीमत् परमहंसपरिव्राजकाचार्य श्रीमच्छङ्करभगवत्पादप्रतिष्ठित-
श्रीकाञ्चीकामकोटिपीठाधीश्वर श्रीमचन्द्रशेखरेन्द्रसरस्वती-
श्रीपादैः क्रियते नारायणस्मृतिः

श्रीमद्भगवत्पादैः सर्वजनोद्धारणार्थम् अनुगृहीतस्य **भजगोविन्द-नाम्ना** प्रसिद्धस्य सरलसरलस्य मधुरमधुरस्य च **मोहमुद्गरस्य** मुद्रापणेन प्रचारणेन च आबालम् आपामरं च जगत् विशुद्धान्तःकरणम् भगवद्भक्ति-परवशं च स्याद् इति श्रीगुरुरूपम् भगवन्तम् प्रार्थयामः ॥

मुखाम् :
श्री जंबुकेश्वरक्षेत्रम्
स्वभानु सं० आषाढ-
बहुलपञ्चमी
बुधवासरः.

इति
नारायणस्मृतिः.

உ

ஸ்ரீ:

முத்ரை

ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜக ஆசார்யர்களான ஸ்ரீமத் சங்கர பகவத் பாதர்களினுல் ப்ரதிஷ்டை செய்யப் பெற்ற ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதீச்வரர்களான ஸ்ரீமத் சந்த்ரசேகரேந்த்ர ஸரஸ்வதீ ஸ்ரீ பாதர்களால் நாராயண ஸ்மரணம் செய்யப்படுகிறது.

ஸ்ரீ ஆதி சங்கர பகவத் பாதர்களினுல் ஜனங்கள் அனைவரையும் கைதூக்கி விடுவதற்காக அருளப்பட்டதாயும், பஜ கோவிந்தம் என்ற பெயரால் பிரஸித்த மானதாயும், ஸரளத்திலும் ஸரளமாயும் (எளிதிலும் எளியதாயும்), மதுரத்திலும் மதுரமாயும் (இனிதிலும் இனியதாயும்) உள்ள மோஹ முத்க்ரம் என்ற இந்த நூலை அச்சிடுவதனுலேயும் ப்ரசாரம் செய்வதனுலேயும் குழந்தைகள் பாமரர்கள் உள்பட உலகம் அந்தஃகரண சுத்தியை அடைய வேண்டும் என்றும் பகவத் பக்திக்கு பரவசப்பட்டதாய் ஆகவேண்டும் என்றும் ஸ்ரீ குருவின் ரூபமான பகவானை வேண்டிக் கொள்ளுகிறோம்.

முகாம்:
ஸ்ரீ ஜம்புகேச்வர க்ஷேத்ரம்,
ஸ்வபானு ஸம்வத்ஸர ஆஷாட
பஹுள பஞ்சமீ புதவாஸரம்.

இப்படிக்கு
நாராயண ஸ்ம்ருதி:.

हरिः ओम्

# ॥ भज गोविन्दम् ॥

**भज गोविन्दं भज गोविन्दं भज गोविन्दं मूढमते ।**
**संप्राप्ते सन्निहिते काले न हि न हि रक्षति डुकृञ् करणे ॥ १ ॥**

1. *பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் பஜ கோவிந்தம் மூடமதே |*
*ஸம்ப்ராப்தே ஸந்நிஹிதே காலே ந ஹி ந ஹி ரக்ஷதி டுக்ருஞ் கரணே ||*

**गोविन्दं** ஸ்ரீ கோவிந்தனை (பகவானை) **भज** பஜனம் செய் (பக்திசெய்); **गोविन्दं** ஸ்ரீ கோவிந்தனை (பகவானை) **भज** ஸேவை செய்; **गोविन्दं** ஸ்ரீ கோவிந்தனை (பகவானை) **भज** உபாஸனை செய். (हे) **मूढमते** (மதிமயங்கிய) மூடனே! **संनिहिते काले संप्राप्ते** உனக்கு இடப்பட்ட காலம் கிட்டும் பொழுது (அதாவது யமன் வரும்பொழுது) **डुकृञ् करणे** 'டுக்ருஞ் கரணே' என்ற (தாதுபாடம்) வியாகரண சாஸ்திரமானது **न हि न हि रक्षति** காப்பாற்றவே காப்பாற்றாது.

கருத்துரை: இந்த சுலோகத்தில் மயங்கிய புத்தியுள்ளவனைப் பார்த்து, "அப்பா, கோவிந்தனை பஜனம் பண்ணு; உன்னுடைய மற்ற வித்தையெல்லாம் (நீ கற்றுக்கொள்ளும் வியாகரணம் எல்லாம்) உன்னுடைய கடைசிக் காலத்தில், யமன் உன்னை அழைக்க வரும்பொழுது, உனக்கு உதவியளிக்காது. பகவானுடைய நாமம் ஒன்றுதான் அப்பொழுது உனக்கு முக்தி சாம்ராஜ்யத்தைத் தரும்" என்கிறார். (ஆசார்ய. ஆர்ய தர்மம் 12-2-42.)

கோவிந்த நாமத்தின் பெருமை: (1) பகவானுக்கு எவ்வளவோ பெயர்கள் இருந்தபோதிலும் கோவிந்த நாமத்தை இன்றும் என்றும் சொல்லிக்கொண்டு வருகிறோம் (ஆசார்ய. ஆர்ய தர்மம் 12-2-42).

(2) கோவிந்த நாம ஸங்கீர்த்தனம் என்று ஒருவர் சொன்னால், அந்தக் கூட்டத்தில் இருக்கும் அனைவரும் 'கோவிந்தா', 'கோவிந்தா' என்று ஏகமனதாக உரக்கச் சொல்லி பகவத் த்யானம் செய்கிறார்கள். 'கோவிந்தம் போடுதல்' என்ற வழக்கம் எக்காலத்திலும் உள்ளது. திருப்பதிமலைக்குப்போனால் மலை ஏறும்போதெல்லாம் 'கோவிந்தம் போடு' என்று ஸகல ஜனங்களும் சொல்வதை இன்றைக்கும் காணலாம்; 'கோவிந்தா, கோவிந்தா' என்றே சொல்லிக்கொண்டு போகிறார்கள் (ஆசார்ய. ஆர்யதர்மம் 12-2-42).

(3) பெரியோர்கள் சாப்பிடும்போதுகூட 'கோவிந்த, கோவிந்த, கோவிந்த' என்று சொல்லுகிறார்கள். "சாப்பிடும்போது, கோவிந்த' என்று சொன்னால், அந்த மனோபாவத்தோடு அன்னம் உள்ளே போனால், அது பரமாத்ம தியானம் உண்டாக அனுகூலம் செய்யும். கோவிந்த சப்தத்தோடு கூடிய அன்னரஸம் உடம்பில் சேரச்சேர ஈச்வர ஞாபகம் உண்டாகும். தினந்தோறும் போஜனம் பண்ணும்போது, 'கோவிந்த' என்ற நாமாவைச் சொல்ல வேண்டும். நாம் என்றைக்கும் போஜனத்தை நிறுத்தப் போவதில்லை. இந்த அப்பியாஸத்தினால் கோவிந்த நாமோச்சாரணமும் நிற்காது" (ஆசார்ய. வால்யூம் 2, பக்கம் 230).

(4) இப்படி கோவிந்த நாமாவை இன்றும் என்றும் சொல்லி வருவதற்கு ஏதாவது ஒரு காரணம் இருக்கவேண்டும் என்று யோசித்துப் பார்த்தேன். காரணம் புலப்பட்டது. நமது ஆதி ஆசார்யர்கள் (பகவத்பாதர்கள்) 'பஜ கோவிந்தம்' என்ற கிரந்தத்தை எழுதி கோவிந்தநாமாவைப் பிரசாரத்திற்குக் கொண்டுவந்துவிட்டார்கள். 'மஹான்கள் ஒரு வார்த்தையைச் சொன்னால் அது கல்ப கோடி காலம் ஆனாலும், அழியாமல் வளர்ந்து விளங்கிக்கொண்டு வருகிறது' என்பதை இதிலிருந்து நிதர்சனமாக நாம் தெரிந்து கொள்ளலாம் (ஆசார்ய. ஆர்ய தர்மம் 12-2-42).

பகவந்நாமாவை எப்பொழுதும் சொல்ல அப்பியாஸம் செய்ய வேண்டும்: நாம் அநேக காரியங்களைச் செய்து கொண்டிருந்த போதிலும், பகவானுடைய நாமத்தில் முக்கியமாக திருஷ்டியிருக்கவேண்டும். பகவானை அடைய, தியானம் செய்யவேண்டும். தியானம் முதலில் சற்று கஷ்டமாகத் தோன்றும். ஆகையால், முதற்படியாகப் பகவான் நமக்குக் கொடுத்திருக்கும் நாக்கைக் கொண்டு நாமாவளியைச் சொல்லிக்கொண்டே யிருக்கவேண்டும். இந்த நாமத்தை ஜபம் செய்ய ஒரு வழக்கம் கொண்டுவிட்டால், பிறகு இது சுலபமாய்ப் போய்விடும். நம்முடைய கடைசிப் பிரயாண காலத்தில் பகவந்நாமத்தை ஒரு முறை நினைத்து விட்டால், அதுவே நமக்கு எல்லாப் பலனையும் கொடுத்து விடும். ஆகையாலேதான் ஸ்ரீ பகவத்கீதையில் (8, 10) பகவான் இந்த விஷயத்தைச் சொல்லியிருக்கிறார்:—

"प्रयाणकाले मनसाऽचलेन भक्त्या युक्तो योगबलेन चैव ।
भ्रुवोर्मध्ये प्राणमावेश्य सम्यक् स तं परं पुरुषमुपैति दिव्यम् ॥"

சஞ்சலம் அற்ற மனதோடும் பக்தியோடும் யோக வலிமையோடும் கூடியவன் சாகுங்காலத்தில் பிராணனை இரண்டு புருவங்களுக்கும் இடையே செவ்வையாக நிறுத்தி அந்த திவ்வியமான பரம புருஷனை அடைகிறான்.

"அந்தச் சமயத்தில், அதாவது. சாகும் சமயத்தில் பகவந்நாமாவைச் சொன்னால் போதும்; அதைப்பற்றி இப்பொழுது என்ன கவலை" என்று இருந்தால், ஏமாந்து போகவேண்டியதுதான். இன்று முதற்கொண்டே சொல்லி, இந்த நாக்கைப் பழக்கிக்கொண்டு வந்தால்தான் அந்தச் சமயம் பகவந்நாமா நம் நாக்கில் வருவதற்கும் அதன் மூலமாய் பகவானை ஸ்மரிக்கவும் முடியும்; பகவத்கீதையில் (8, 5) இதையே பகவான் சொல்லியிருக்கிறார்:

" अन्तकाले च मामेव स्मरन् मुक्त्वा कलेवरम् ।
यः प्रयाति स मद्भावं याति नास्त्यत्र संशयः ॥"

எவன் சாகும் ஸமயத்திலும் என்னையே நினைக்கின்றவனாய்ச் சரீரத்தை விடுகின்றானோ, அவன் எனது நிலையை அடைகின்றான் : இதில் சந்தேகம் இல்லை. "**तस्मात् सर्वेषु कालेषु माम् अनुस्मर**" (8,7)—ஆதலின் எக்காலத்திலும் நீ என்னை நினைத்துக் கொண்டிருக்கவேண்டும் (ஆசார்ய. ஆர்ய தர்மம் 12-2-42).

வியாகரணம் எம்மட்டில் உபயோகம்? இந்த சுலோகத்தின் நான்காவது பாதத்திற்கு, 'வியாகரணம் மரண காலத்தில் உபயோகப்படாது' என்று பொருள் விளங்குகிறது; இதனால் ஸ்ரீ ஆதி ஆசார்யர் வியாகரணம் படிக்கக் கூடாது என்று கண்டித்து விட்டதாக அர்த்தம் கொள்ளக் கூடாது. தர்ம ஸ்தானம் பதினான்காவன—நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், மீமாம்ஸை, நியாயம், புராணம், தர்ம சாஸ்திரம் என்பவை. ஆறு அங்கங்களில் வியாகரணம் முக்கியமானது. வேதபுருஷனுக்கு வியாகரணம் முகம் போன்றது. வேதத்தின் பொருளை உணர்வதற்கும் அதன் மூலம் ஆத்மலோகத்தில் இன்பத்தை அடைவதற்கும் இன்றியமையாத ஸாதனம் என்று வியாகரணத்தின் பிரயோஜனத்தைப் பற்றி விரிவாக நமது ஆசார்ய ஸ்வாமிகள் கூறியுள்ளார்கள். ஆனால், "ஸதா ஸர்வகாலம் வியாகரண சர்ச்சையிலே ஈடுபட்டு, ஆத்மஜ்ஞானத்தை மறந்து, பகவானை ஸ்மரிக்காமல் இருந்தால், கடைசி காலத்தில் வியாகரண சர்ச்சை பிரயோஜனப்படமாட்டாது" என்று ஆதி ஆசார்யர்கள் கூறுகிறார்கள். இதே பொருளிலேதான் ஆதி ஆசார்யர்கள் 'சிவானந்த லஹரி'யில் (6)

6319 R65(வழ்ழி)

"वृथा कण्ठक्षोभं वहसि तरसा तर्कवचसा
पदाम्भोजं शंभोर्भज परमसौख्यं व्रज सुधीः ।"

என்று, "வீணாகத் தர்க்கத்தில் காலம் போக்குகிறாய். சிவனுடைய சரணங்களை அடையவேண்டும். மற்றவையெல்லாம் பயனற்றவை" என்கிறார்கள். 'பஜகோவிந்த'த்தில், 'யமன் கிட்டே வந்தால் வியாகரணம் உபயோகப்படாது' என்று சொல்லியிருக்கிறார்கள். 'சிவானந்த லஹரி'யில் 'தர்க்கம் உபயோகப்படாது' என்று சொல்லியிருக்கிறார்கள். ஒன்று விஷ்ணுஸ்துதி; மற்றொன்று சிவஸ்துதி. ஒன்றில் வியாகரணமும் மற்றொன்றில் தர்க்கமும் சொல்லப்பட்டிருக்கின்றன. உபயோகமில்லாததில் இந்த இரண்டும் ஒன்றுதான். இரண்டும் ஒரே கருத்தோடு சொன்னவை. எல்லா சாஸ்திரங்களுக்கும் பிரயோஜனம் பக்தி பண்ணுவதுதான் (ஆசார்ய. 2, 229).

பஜ—பஜனம்.

**भज सेवायाम्** என்பது தாது பாடம். "பஜனம் என்பதற்கு ஸேவை என்பதுதான் அர்த்தம்" (ஆசார்ய. 2, 120). "பக்தி முக்திக்குப் பூர்வாங்கம்" (ஆசார்ய, 3, 17). பஜனை, பஜனம், பக்தி, ஸேவை, உபாஸனை இவையெல்லாம் ஒரே பொருள் உள்ளவை.

**संप्राप्ते सन्निहिते काले**—யமன் ஒரு க்ஷணம்கூட வீணாக இருப்பதில்லை. அவன் வந்துகொண்டே யிருக்கிறான்; எத்தனை நாள் ஆயிற்றோ அவ்வளவு தூரம் கிட்டே வந்துவிடுவான். பிரதிக்ஷணமும் வந்துகொண்டே யிருக்கிறான். அவன் எப்பொழுது வருவான் என்பது தெரியாது. வந்தாலும் வராவிட்டாலும் காலனுக்கு யமனாக உள்ளவனுடைய காலைப் பிடித்துக்கொண்டால் கவலையில்லை (ஆசார்ய. 2, 229).

கோவிலூர் ஆண்டவர் A. No.

## கோவிந்த சப்தத்தின் பொருளும் கோ-ஸம்ரக்ஷணமும்

'கோவிந்த' என்ற பதம் விஷ்ணு ஸஹஸ்ர நாமத்தில் 187, 539-வது நாமாக்களாக இருக்கின்றது. விஷ்ணு ஸஹஸ்ரநாமத்திற்கு ஆதி ஆசார்யர் அவர்கள் பாஷ்யம் செய்திருக்கிறார்கள். பசுக்களைக் காப்பாற்றுகிறவர் என்பது ஒரு பொருள். "கோ-ஸம்ரக்ஷணம்" என்பது லோகத்தில் எல்லா ஜாதியார்களும் செய்யக்கூடிய தர்மம். நாலு வர்ணத்தாரும் இதர ஜாதியாரும் செய்யக்கூடிய தர்மம். கோவானது லோகத்திற்குத் தாயாக இருக்கிறது. பசுவோ எந்த ஜாதிக்கும் ஆயுள் உள்ளவரையில் பால் கொடுத்து ரக்ஷிக்கிறது. இதையெல்லாம் உத்தேசித்துத் தான் சாஸ்திரங்களில் கோவை ரக்ஷிக்கவேண்டும் என்று சொல்லி யிருக்கிறது. பசுவை நன்றாக ஸம்ரக்ஷணை செய்து அதன் கன்றுக்குக் கண்டு பாக்கியுள்ள பாலை ஜனங்களுக்கு உபயோகப்படுத்துமாறு அவ்வளவு நன்றாக புஷ்டியாகப் பசுவை ஸம்ரக்ஷிப்பது ஒரு முக்கியமான தர்மம். கோரக்ஷணம் என்ற கார்யத்தை ஈச்வர பக்தியுடன் செய்து பகவானுடைய கிருபைக்குப் பாத்திரராகவேண்டும்" ஆசார்ய- 1, அனுபந்தம் 58, 60, 61.)

मूढ जहीहि धनागमतृष्णां कुरु सद्बुद्धिं मनसि वितृष्णाम् ।
यल्लभसे निजकर्मोपात्तं वित्तं तेन विनोदय चित्तम् ॥ भज ॥

2. மூட ஜஹீஹி தனாகம த்ருஷ்ணாம்
குரு ஸத்புத்திம் மனஸி வித்ருஷ்ணாம் |
யல்(த்)லபஸே நிஜகர்மோபாத்தம்
வித்தம் தேன விநோதய சித்தம் || (பஜ)

**धन-आगम तृष्णां** பணம் வருவதில் பேராசையை **जहीहि** விட்டுவிடு; **मूढ** மூடனே! **मनसि** மனதில் **वितृष्णां** பேராசை யற்ற **सद्बुद्धिं** உத்தமமான புத்தியை **कुरु** செய்; **निज-कर्म-उपात्तं** தன் வர்ண-ஆசிரம விதிகளிலிருந்து வழுவாமல் செய்யப்பட்ட கர்மாவால் அடையப்பட்டதும், தனது பூர்வ கர்மானுஸாரமாய் அடையப்பட்டதுமான **यत् वित्तं** எந்தப் பொருளை **लभसे** அடைகின்றாயோ, **तेन** அந்தப்பொருளினால் **चित्तं** உன்னுடைய மனதை **विनोदय** திருப்தி செய்துகொள்.

**भज गोविन्दं भज गोविन्दं भज गोविन्दं मूढमते** என்பதைப் பல்லவியாக இதற்கும் மற்றெல்லா சுலோகங்களுக்கும் கூட்டிக் கொள்க.

**नारीस्तनभरनाभीदेशं दृष्ट्वा मा गा मोहावेशम् ।**
**एतन्मांसवसादिविकारं मनसि विचिन्तय वारं वारम् ॥ भज ॥**

3. நாரீ-ஸ்தன-ஹர-நாஹீ-தேஶம் த்ருஷ்ட்வா மா கா மோஹாவேஶம்|
ஏதந்(த்) மாம்ஸ-வஸாதி-விகாரம் மனஸி விசிந்தய வாரம் வாரம் ||
(ஹஜ)

**नारी-स्तन-भर-नाभी-देशं** ஸ்திரீயினுடைய ஸ்தனபாரம், நாபி ஆகிய இடங்களை **दृष्ट्वा** பார்த்து **मोह-आवेशं** மோகமாகிற ஆவேசத்தை **मा (अ)गाः** அடையாதே; **एतत्** இது **मांस-वसा आदि-विकारं** மாம்ஸம் கொழுப்பு முதலியவைகளுடைய மாறுபாடு என்று **वारं वारं** அடிக்கடி **मनसि** மனதில் **विचिन्तय** யோசித்துப் பார்.

**नलिनीदलगतजलमतितरलं तद्वज्जीवितमतिशयचपलम् ।**
**विद्धि व्याध्यभिमानग्रस्तं लोकं शोकहतं च समस्तम् ॥ भज ॥**

4. நளினீ-தள-கத-ஜலமதிதரளம் தத்வஜ்(த்) ஜீவிதமதிஶயசபலம் |
வித்தி வ்யாத்யபிமான-க்ரஸ்தம் லோகம் ஶோக-ஹதம் ச
ஸமஸ்தம் || (ஹஜ)

**नलिनी-दल-गत-जलम्** தாமரை யிலையை அடைந்த ஜலத்துளியானது **अतितरलं** மிகவும் சஞ்சலமானது; **तद्वत्** அது போல், **जीवितं** (நமது) உயிரானது **अतिशय-चपलं** மிகவும் நிலையில்லாதது; **समस्तं लोकं** உலகம் அனைத்தையும் **व्याधि-अभिमान-ग्रस्तं** வியாதி அகங்காரம் இவைகளுக்கு ஆளாகியதென்றும், **शोक-हतं च** சோகத்தால் பீடிக்கப்பட்டதென்றும், **विद्धि** அறிந்துகொள்.

यावद्वित्तोपार्जनसक्तः तावन्निजपरिवारो रक्तः ।
पश्चाज्जीवति जर्जरदेहे वार्तां कोऽपि न पृच्छति गेहे ॥ भज ॥

5. யாவத்-வித்தோபார்ஜன-ஸக்தஃ தாவந்(த்)நிஜ-பரிவாரோ ரக்தஃ |
பஶ்சாஜ்(த்)-ஜீவதி ஜர்ஜர-தேஹே வார்(த்)தாம்கோ'பி நப்ருச்சதி
கேஹே ॥ (பஜ)

**यावत्** எதுவரையில், **वित्त-उपार्जन-सक्तः** பணம் சம்பாதிப்பதில் ஈடுபட்டவனாய் இருக்கிறானோ, **तावत्** அது வரை **निज-परिवारः रक्तः** தன்னைச் சூழ்ந்த மனிதர்கள் தன்னிடம் பிரியமுள்ளவர்களாக இருப்பார்கள்; **पश्चात्** பிறகு, **जर्जर-देहे जीवति (सति)** தளர்ந்த தேகத்தோடு உயிருடன் இருக்கும்போது, **कोऽपि** எவனும், **गेहे** வீட்டில் (உன் வீட்டிற்கு வந்து) **वार्तां** யோக க்ஷேமத்தை **न पृच्छति** விசாரிப்பதில்லை.

यावत् पवनो निवसति देहे तावत् पृच्छति कुशलं गेहे ।
गतवति वायौ देहापाये भार्या बिभ्यति तस्मिन् काये ॥ भज ॥

6. யாவத் பவனோ நிவஸதி தேஹே தாவத்ப்ருச்சதி குஶலம் கேஹே|
கதவதி வாயௌ தேஹாபாயே பார்யா பிப்யதி தஸ்மின்
காயே ॥ (பஜ)

**यावत्** எதுவரையில், **देहे** தேகத்தில் **पवनः** மூச்சுக்காற்று **निवसति** தங்கி இருக்கிறதோ, **तावत्** அது வரையில் **गेहे** வீட்டில் **कुशलं** க்ஷேம சமாசாரத்தை **पृच्छति** விசாரிக்கிறான்; **वायौ** பிராணவாயு, **देह-अपाये** தேகத்திற்கு அபாயம் ஏற்பட்டு, **गतवति** போகும்போது, **भार्याः** (அண்டிய) மனைவி முதலியவர்களும் **तस्मिन् काये** அந்த உயிரற்ற சரீரத்தைக் கண்டு **बिभ्यति** பயப்படுகிறார்கள்.

बालस्तावत् क्रीडासक्तस्तरुणस्तावत्तरुणीसक्तः ।
वृद्धस्तावच्चिन्तासक्तः परे ब्रह्मणि कोऽपि न सक्तः ॥ भज ॥

7. பாலஸ்தாவத் க்ரீடாஸக்தஸ்தருணஸ்தாவத் தருணீஸக்தஃ |
வ்ருத்தஸ்தாவச்(த்)சிந்தாஸக்தஃ பரே ப்ரஹ்மணி கோ'பி ந
ஸக்தஃ || (பஜ)

**बालः तावत्** சிறுவனோ என்றால் (பாலனாய் இருக்கும் போது) **क्रीडा-सक्तः** விளையாட்டில் ஈடுபட்டிருக்கிறான்; **तरुणः तावत्** யுவாவோ என்றால் (யௌவன புருஷனாய் இருக்கும்போது) **तरुणी-सक्तः** யுவதியினிடத்தில் ஈடுபடுகிறான்; **वृद्धः तावत्** கிழவனோ என்றால் (கிழவனாய் இருக்கும்போது) **चिन्ता-सक्तः** கவலையில் ஆழ்ந்து இருக்கிறான்; **कोऽपि** எவனும் **परे ब्रह्मणि** பரப் பிரும்மத்தில் **न सक्तः** ஈடுபடுவதில்லை.

**का ते कान्ता कस्ते पुत्रः संसारोऽयमतीव विचित्रः ।**
**कस्य त्वं कः कुत आयातस्तत्त्वं चिन्तय तदिदं भ्रातः ॥ भज ॥**

8. கா தே காந்தா கஸ்தே புத்ரஃ ஸம்ஸாரோ'(அ)யம் அதீவ விசித்ரஃ |
கஸ்ய த்வம் க: குத ஆயாதஸ்தத்த்வம் சிந்தய ததிதம்ப்ராதஃ(பஜ)

**ते कान्ता का** உன்னுடைய மனைவி யார்? **ते पुत्रः कः** உன்னுடைய புத்திரன் யார்? **अयं संसारः** இந்த ஸம்ஸாரமானது **अतीव** மிகவும் **विचित्रः** விந்தையாய் இருக்கிறது. **कस्य त्वं** நீ யாருடையவன்? (**त्वं**) **कः** (நீ) யார்? **कुतः आयातः** எவ்விடத்திலிருந்து வந்திருக்கிறாய்? **हे भ्रातः** ஏ தம்பி! **तत्** மேற்சொல்லப்பட்ட **इदम्** இது ஸம்பந்தமான **तत्त्वं** உண்மையை **चिन्तय** நன்றாக விசாரி.

**सत्सङ्गत्वे निस्सङ्गत्वं निस्सङ्गत्वे निर्मोहत्वम् ।**
**निर्मोहत्वे निश्चलितत्वं निश्चलितत्वे जीवन्मुक्तिः ॥ भज ॥**

9. ஸத்ஸங்கத்வே நிஸ்ஸங்கத்வம் நிஸ்ஸங்கத்வே நிர்மோஹத்வம் |
நிர்மோஹத்வே நிஶ்சலிதத்வம் நிஶ்சலிதத்வே ஜீவன்முக்திஃ ||
(பஜ)

**सत्-सङ्गत्वे** நல்லோர்களுடைய சேர்க்கை ஏற்படும்பொழுது **निस्सङ्गत्वं** பொருள்களிலும் (ஆசையின்மை)

பற்றின்மை உண்டாகிறது; **निस्सङ्गत्वे** பற்றின்மை உண்டாகவே, **निर्मोहत्वं** மோகமற்ற நிலை உண்டாகிறது; **निर्मोहत्वे** மோகமற்ற நிலை உண்டாகவே, **निश्चलितत्वं** சஞ்சலமில்லாத (சலனம் இல்லாத) ஞான நிஷ்டையும் உண்டாகிறது; **निश्चलितत्वे** சஞ்சலமில்லாத ஞான நிஷ்டையும் உண்டாகவே **जीवन्मुक्तिः** (உயிருள்ளபோதே விடுதலை என்ற) ஜீவன் முக்தி நிலை ஏற்படுகிறது.

ஜீவன்முக்தி—ஜீவன்முக்தியைப்பற்றி ஆசார்யர்கள் (ஆசார்ய. 1, 12—24) ஒரு தனி பிரஸங்கம் செய்திருக்கிறார்கள். மோக்ஷம் அடைந்தவர்களுக்கு சாவு பிறப்பு என்பவை இல்லையாதலால், அவர்கள் **अमृताः** என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த சரீரம் இருக்கும்பொழுதே சாவில்லாத நிலையைப் பெறலாம் என்பது புருஷஸூக்தமாகிய வேத வாக்கியத்திலிருந்தும் மற்ற வேத வாக்கியங்களிலிருந்தும் கிடைக்கின்றது. பகவத்பாதர்கள் சரீரம் இருக்கும்பொழுதே அதை இல்லாமற் செய்துகொள்வது தான் அம்ருதம் மோக்ஷம் என்று ஸ்தாபித்திருக்கிறார்கள்.

**वयसि गते कः कामविकारः शुष्के नीरे कः कासारः ।**
**क्षीणे वित्ते कः परिवारः ज्ञाते तत्त्वे कः संसारः ॥ भज ॥**

10. வயஸி கதே கஃ காமவிகாரஃ ஶுஷ்கே நீரே கஃ காஸாரஃ |
க்ஷீணே வித்தே கஃ பரிவார: ஜ்ஞாதே தத்த்வே கஃ ஸம்ஸார: ||
(பஜ)

**वयसि गते** வயது சென்ற பிறகு, **कामविकारः कः** காம விகாரம் என்ன இருக்கிறது? (அதாவது, காம விகாரம் இல்லை என்றபடி). **नीरे** ஜலமானது **शुष्के** வற்றிப்போன காலத்தில், **कासारः** ஏரியானது, **कः** என்ன இருக்கிறது? (நீர் வற்றினால் ஏரி என்ற பெயரே இல்லை என்றபடி). **क्षीणे वित्ते** பணம் குறைந்த பொழுது. **परिवारः** உன்னைச் சுற்றியிருக்கும் பரிவாரம் **कः** என்ன இருக்கிறது? (பரிவாரங்கள் உன்னை

ஈசான்ய மடம்
திருவண்ணாமலை. R.S.
(வ. ஆ. மாவட்டம்)



விட்டுத் தாமே அகன்று விடுவார்கள் என்றபடி. **ज्ञाते तत्त्वे** உண்மைப்பொருள் அறியப்பட்டால், **संसारः कः** ஸம்ஸாரம் என்ன இருக்கிறது? (ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் ஆகும் பொழுது, ஸம்ஸாரம் அற்றுப்போகும் என்றபடி.)

தத்துவ ஞானம் (உண்மைப்பொருள்.) இதை முடிவாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்ன? வஸ்து ஒன்று தான் இருக்கிறது; எல்லாம் ஈச்வர ஸ்வரூபம் என்பதே. வாஸனையால் வேறு வேறாகத் தோன்றுகிறது; எல்லாவற்றையும் ஒன்றாக்க வேண்டும். நாம் என்பதையும் கரைக்கவேண்டும். அதற்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிக்கவேண்டும். இதற்கு ஸாதனம் சுருதி, ஸ்மிருதி. புராணம், கோயில் தர்சனம், பூஜை முதலியவைகள். (ஆசார்ய.1,99.)

**मा कुरु धनजनयौवनगर्वं हरति निमेषात् कालः सर्वम् ।**
**मायामयमिदमखिलं हित्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥ भज ॥**

11. மா குரு த4ன-ஜன-யௌவன-க3ர்வம்
ஹரதி நிமேஷாத் காலஃ ஸர்வம் |
மாயா-மயமித3மகி2லம் ஹித்வா
ப்3ரஹ்ம-பத3ம் த்வம் ப்ரவிஶ விதி3த்வா || (ஹஜ)

**धन-जन-यौवन-गर्वं** செல்வம் சுற்றத்தார் யௌவனம் இவைகளைப்பற்றிய கர்வத்தை, **मा कुरु** கொள்ளாதே; **निमेषात्** ஒரு இமைக்கொட்டு நேரத்தில், **कालः** காலமானது, **सर्वं** எல்லாவற்றையும் **हरति** கொள்ளை கொள்கின்றது (அழிக்கின்றது); **इदं** இந்த **मायामयं** மாயாமயமான **अखिलं** ஸமஸ்தப் பொருளையும் (லோகத்தையும்) **हित्वा** விட்டுவிட்டு, **विदित्वा** உண்மையை அறிந்துகொண்டு, **त्वं** நீ **ब्रह्मपदं** அந்த பிரும்ம நிலையை **प्रविश** அடைவாயாக' (பரப் பிரும்ம ஞானமே மோக்ஷம் என்பது பொருள்.)

சிருஷ்டி (படைப்பு) ரஜோகுணம்; ஸ்திதி (பரிபாலித்தல்) ஸத்வ குணம், ஸம்ஹாரம் (நாசம்) தமோகுணம். இம்மூன்றும் சேர்ந்தது மாயை. இந்த குணங்கள் பரமாத்மாவின் ஸ்வபாவமல்ல; காரியங்களின்பொருட்டு அவைகளை கிரஹித்துக்கொள்ளுகிறார். ஈச்வரன்

கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

பற்றின்மை உண்டாகிறது ; **निस्सङ्गत्वे** பற்றின்மை உண்டாகவே, **निर्मोहत्वं** மோகமற்ற நிலை உண்டாகிறது ; **निर्मोहत्वे** மோகமற்ற நிலை உண்டாகவே, **निश्चलितत्वं** சஞ்சலமில்லாத (சலனம் இல்லாத) ஞான நிஷ்டையும் உண்டாகிறது ; **निश्चलितत्वे** சஞ்சலமில்லாத ஞான நிஷ்டையும் உண்டாகவே **जीवन्मुक्तिः** (உயிருள்ளபோதே விடுதலை என்ற) ஜீவன் முக்தி நிலை ஏற்படுகிறது.

ஜீவன்முக்தி—ஜீவன்முக்தியைப்பற்றி ஆசார்யர்கள் (ஆசார்ய. 1, 12—24) ஒரு தனி பிரஸங்கம் செய்திருக்கிறார்கள். மோக்ஷம் அடைந்தவர்களுக்கு சாவு பிறப்பு என்பவை இல்லையாதலால், அவர்கள் **अमृताः** என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறார்கள். இந்த சரீரம் இருக்கும்பொழுதே சாவில்லாத நிலையைப் பெறலாம் என்பது புருஷஸூக்தமாகிய வேத வாக்கியத்திலிருந்தும் மற்ற வேத வாக்கியங்களிலிருந்தும் கிடைக்கின்றது. பகவத்பாதர்கள் சரீரம் இருக்கும்பொழுதே அதை இல்லாமற் செய்துகொள்வது தான் அம்ருதம் மோக்ஷம் என்று ஸ்தாபித்திருக்கிறார்கள்.

**वयसि गते कः कामविकारः शुष्के नीरे कः कासारः ।**
**क्षीणे वित्ते कः परिवारः ज्ञाते तत्त्वे कः संसारः ॥ भज ॥**

10. வயஸி கதே க: காமவிகார: ஶுஷ்கே நீரே க: காஸார: |
க்ஷீணே வித்தே க: பரிவார: ஜ்ஞாதே தத்த்வே க: ஸம்ஸார: ॥
(பஜ)

**वयसि गते** வயது சென்ற பிறகு, **कामविकारः कः** காம விகாரம் என்ன இருக்கிறது? (அதாவது, காம விகாரம் இல்லை என்றபடி). **नीरे** ஜலமானது **शुष्के** வற்றிப்போன காலத்தில், **कासारः** ஏரியானது, **कः** என்ன இருக்கிறது? (நீர் வற்றினால் ஏரி என்ற பெயரே இல்லை என்றபடி). **क्षीणे वित्ते** பணம் குறைந்த பொழுது. **परिवारः** உன்னைச் சுற்றியிருக்கும் பரிவாரம் **कः** என்ன இருக்கிறது? (பரிவாரங்கள் உன்னை

ஸ்ரீ ராமநாத...
ஈசான்ய மடம்
திருவண்ணாமலை. R.S.
(வ. ஆ. மாவட்டம்)



விட்டுத் தாமே அகன்று விடுவார்கள் என்றபடி. **ज्ञाते तत्त्वे** உண்மைப்பொருள் அறியப்பட்டால், **संसारः कः** ஸம்ஸாரம் என்ன இருக்கிறது? (ஸ்வரூப ஸாக்ஷாத்காரம் ஆகும் பொழுது, ஸம்ஸாரம் அற்றுப்போகும் என்றபடி.)

கோவிலூர் KOVILOOR MADALAYAM மடாலயம்

தத்துவ ஞானம் (உண்மைப்பொருள்) இன்னதென்று முடிவாக நாம் அறிந்துகொள்ளவேண்டியது என்னவென்றால்: வஸ்தும் ஒன்று தான் இருக்கிறது; எல்லாம் ஈச்வர ஸ்வரூபம் என்பதே. வாஸனையால் வேறு வேறாகத் தோன்றுகிறது; எல்லாவற்றையும் ஒன்றாக்க வேண்டும். நாம் என்பதையும் கரைக்கவேண்டும். அதற்கு வேண்டிய சாஸ்திரங்களைப் படிக்கவேண்டும். இதற்கு ஸாதனம் சுருதி, ஸ்மிருதி. புராணம், கோயில் தர்சனம், பூஜை முதலியவைகள். (ஆசார்ய.1,99.)

**मा कुरु धनजनयौवनगर्वं हरति निमेषात् कालः सर्वम् ।**
**मायामयमिदमखिलं हित्वा ब्रह्मपदं त्वं प्रविश विदित्वा ॥ भज ॥**

11. மா குரு தன-ஜன-யௌவன-கர்வம்
ஹரதி நிமேஷாத் கால: ஸர்வம் |
மாயா-மயமிதமகிலம் ஹித்வா
ப்ரஹ்ம-பதம் த்வம் ப்ரவிச விதித்வா || (பஜ)

**धन-जन-यौवन-गर्वं** செல்வம் சுற்றத்தார் யௌவனம் இவைகளைப்பற்றிய கர்வத்தை, **मा कुरु** கொள்ளாதே; **निमेषात्** ஒரு இமைக்கொட்டு நேரத்தில், **कालः** காலமானது, **सर्वं** எல்லாவற்றையும் **हरति** கொள்ளை கொள்கின்றது (அழிக்கின்றது); **इदं** இந்த **मायामयं** மாயாமயமான **अखिलं** ஸமஸ்தப் பொருளையும் (லோகத்தையும்) **हित्वा** விட்டுவிட்டு, **विदित्वा** உண்மையை அறிந்துகொண்டு, **त्वं** நீ **ब्रह्मपदं** அந்த பிரும்ம நிலையை **प्रविश** அடைவாயாக' (பரப் பிரும்ம ஞானமே மோக்ஷம் என்பது பொருள்.)

சிருஷ்டி (படைப்பு) ரஜோகுணம்; ஸ்திதி (பரிபாலித்தல்) ஸத்வ குணம், ஸம்ஹாரம் (நாசம்) தமோகுணம். இம்மூன்றும் சேர்ந்தது மாயை. இந்த குணங்கள் பரமாத்மாவின் ஸ்வபாவமல்ல; காரியங்களின்பொருட்டு அவைகளை கிரஹித்துக்கொள்ளுகிறார். ஈச்வரன்

கிர்குணமானவர். குணங்கள் மாயை. 'மா' (मा) என்ற சொல்லுக்கு இல்லை என்று அர்த்தம். யா (या) என்றால் எவள் என்று அர்த்தம். ஆகையால் மாயை (माया) என்றால் 'எவள் இல்லையோ அவள்' என்பது அர்த்தம். வாஸ்தவத்தில் இல்லாததை இருப்பதாக அவர் காட்டுகிறார். (ஆசார்ய. 1, அனுபந்தம் 33.)

**दिनयामिन्यौ सायं प्रातः शिशिरवसन्तौ पुनरायातः ।**
**कालः क्रीडति गच्छत्यायुस्तदपि न मुञ्चत्याशावायुः ॥ भज ॥**

12. தின-யாமின்யௌ ஸாயம்ப்ராதஃ ஶிஶிர-வஸந்தௌ புனராயாதஃ।
காலஃ க்ரீடதி கச்சத்யாயுஸ்ததபி ந முஞ்சத்யாஶா-வாயுஃ ॥
(பஜ)

**दिन-यामिन्यौ** பகலும் இரவும் **सायं प्रातः** ஸாயங்காலமும் விடியற்காலமும் **शिशिर-वसन्तौ** சிசிர ருதுவும் வஸந்த ருதுவும் **पुनः** மறுபடியும் மறுபடியும் **आयातः** திரும்பி வந்துவிடுகின்றன ; **कालः** காலமானது **क्रीडति** விளையாடுகிறது ; **आयुः** (உனது) ஆயுளானது **गच्छति** கழிந்துகொண்டே போகிறது; **तत् अपि** அப்படியிருந்தும் **आशा-वायुः** ஆசையென்கிற காற்றானது **न मुञ्चति** விடுகிறதில்லை.

**का ते कान्ताधनगतचिन्ता वातुल किं तव नास्ति नियन्ता ।**
**त्रिजगति सज्जनसंगतिरेका भवति भवार्णवतरणे नौका ॥ भज ॥**

13. காதே காந்தா-தன-கத-சிந்தா வாதுல கிம் தவ நாஸ்தி நியந்தா ।
த்ரிஜகதி ஸஜ்ஜன-ஸங்கதிரேகா பவதி பவார்ணவ-தரணே
நௌகா ॥ (பஜ)

**कान्ता-धन-गत-चिन्ता** பார்யை பணம் இவைகளைப்பற்றிய கவலை **ते** உனக்கு **का** எதற்கு? **वातुल** பெரும் காற்றைப் போல் அலைபவனே! **तव** உனக்கு **नियन्ता** சிக்ஷகன் **न अस्ति किं** இல்லையா? **त्रिजगति** இந்த மூன்று லோகங்களிலும் **सत्-जन-संगतिः एका** ஸாது ஜனங்களின் சேர்க்கை என்ற ஒன்றே **भव-अर्णव-तरणे** ஸம்ஸாரமாகிய சமுத்திரத்தைத் தாண்டுவதில் **नौका** ஓடமாக **भवति** ஆகிறது.

जटिलो मुण्डी लुञ्चितकेशः काषायाम्बरबहुकृतवेषः ।
पश्यन्नपि च न पश्यति मूढो ह्युदरनिमित्तं बहुकृतवेषः ॥ भज ॥

14. ஜடிலோ முண்டீ லுஞ்சிதகேஶ:
காஷாயாம்பர-பஹுக்ருதவேஷ: ।
பஶ்யன்னபி ச ந பஶ்யதி மூடோ
ஹ்யுதர-நிமித்தம் பஹுக்ருதவேஷ: ॥ (பஜ)

**जटिलः** ஜடை தரித்தவனாய் இருந்தாலும் **मुण्डी** முழு மொட்டையாய் இருந்தாலும் **लुञ्चित-केशः** ஒவ்வொரு கேசத்தையும் பலாத்காரமாய் இழுத்து எடுபட்டவனாய் இருந்தாலும் **काषाय-अम्बर-बहु-कृत-वेषः** காஷாய வஸ்திரங்களுடன் கூடிய அநேக வேஷங்களைத் தரித்திருந்தாலும் (**यः** எவன்) **पश्यन् अपि** பரமாத்ம தத்துவத்தை பார்த்துக் கொண்டிருந்தும் **न पश्यति** பரமாத்ம தத்துவத்தை அனுபவத்திற்குக் கொண்டுவரவில்லையோ (அதாவது, பரப்பிரும்ம ஸாக்ஷாத்காரம் அடையவில்லையோ) (**सः** அவன்) **मूढः** மூடனே ; **बहु-कृत-वेषः** மேல்கூறிய வேஷங்கள் எல்லாம் **उदर-निमित्तं हि** வயிற்றின் பொருட்டேயன்றோ ஆகின்றது, (ஆத்ம ஞானத்தை அடைவிக்கவில்லை யாதலால்).

லுஞ்சிதகேஶ:—இது ஜைன ஸந்யாஸிகளைக் குறிப்பது (ஆசார்ய. 1. 279-280).

अङ्गं गलितं पलितं मुण्डं दशनविहीनं जातं तुण्डम् ।
वृद्धो याति गृहीत्वा दण्डं तदपि न मुञ्चत्याशापिण्डम् ॥ भज ॥

15. அங்கம் கலிதம் பலிதம் முண்டம்
தஶன-விஹீனம் ஜாதம் துண்டம் ।
வ்ருத்தோ யாதி க்ருஹீத்வா தண்டம்
ததபி ந முஞ்சத்யாஶாபிண்டம் ॥ (பஜ)

**अङ्गं** தேகமானது **गलितं** தளர்ந்துவிட்டது: **मुण्डं** தலையானது **पलितं** வெளுத்துவிட்டது ; **तुण्डं** வாய் **दशन-विहीनं जातं**

பல்லற்றுப் போய்விட்டது; **दण्डं** தடியை **गृहीत्वा** பிடித்துக் கொண்டு **वृद्धः** கிழவனாய் **याति** நடக்கிறான்; **तत् अपि** (தேகம் தளர்ந்து தலை நரைத்து பல்லற்ற வாயுடன் கூடி) அப்படியிருந்தும் **आशा-पिण्डं** ஆசையானது **न मुञ्चति** விடுகிறதில்லை.

**अग्रे वह्निः पृष्ठे भानू रात्रौ चुबुकसमर्पितजानुः ।**
**करतलभिक्षस्तरुतलवासस्तदपि न मुञ्चत्याशापाशः ॥ भज ॥**

16. அக்ரே வஹ்நிஃ ப்ருஷ்டே பானூ
ராத்ரௌ சுபுக-ஸமர்(ப்)பிதஜானுஃ |
கர-தல-பிக்ஷஸ்தருதலவாஸஸ்-
தஹபி ந முஞ்சத்யாஶா-பாஶஃ || (பஜ)

**अग्रे** முன்புறத்தில் **वह्निः** அக்னியும் **पृष्ठे** பின்புறத்தில் **भानुः** சூரியனும் இருக்கின்றன; **रात्रौ** ராத்திரியில் **चुबुक-समर्पित-जानुः** மோவாய்க் கட்டையில் ஊன்றிய முழங்கால்களை உள்ளவனாகவும் இருக்கிறான்; **कर-तल-भिक्षः** கையில் பிக்ஷை வாங்கி சாப்பிடுபவனாய் **तरु-तल-वासः** மரத்தடியிலேயே வாஸம் செய்பவனாய் இருக்கிறான். **तत् अपि** அப்படியிருந்தும் **आशापाशः** ஆசை என்னும் பந்தமானது **न मुञ्चति** விலகுவதில்லை.

**कुरुते गङ्गासागरगमनं व्रतपरिपालनमथवा दानम् ।**
**ज्ञानविहीनः सर्वमतेन मुक्तिं न भजति जन्मशतेन ॥ भज ॥**

17. குருதே கங்கா-ஸாகர-கமனம்
வ்ரத-பரிபாலனமதவா தானம் |
ஜ்ஞான-விஹீனஃ ஸர்வமதேன
முக்திம் ந பஜதி ஜன்மஶதேன || (பஜ)

**गङ्गासागर-गमनं कुरुते** ரொம்பவும் கஷ்டஸாத்யமான (கங்கை ஸமுத்ரத்தில் சேரும்) கங்காஸாகரம் என்னும் புண்ய தீர்த்தயாத்திரை போகிறான்; **अथवा** அல்லது, **व्रत-परिपालनं कुरुते** விரதத்தை நழுவாமல் நடத்துகிறான்; **अथवा** அல்லது **दानं कुरुते** தானம் செய்கிறான்; ஆனால், **सर्वमतेन**

எம்மதத்தாலும் ज्ञानविहीनः ஆத்ம ஞானமில்லாதவன் जन्म-शतेन நூறு பிறவிகள் எடுத்தாலும் मुक्ति முக்தியை न भजति அடைகிறதில்லை.

ஞானம். பாபம் பண்ணினேனென்று பயப்படவேண்டாம். இந்த லோகத்திலுள்ள ஸகல பாபிகளுக்கும் முதலானவனாக இருந்தாலும் பயம் வேண்டாம். ஞானமாகிய ஓர் ஓடம் தருகிறேன். அதனால் பாபங்களைத் தாண்டிவிடலாம்" என்று பகவத்கீதையில் (4, 36) பகவான் சொல்லியிருக்கிறார். ஸ்ரீ ஆதி ஆசார்யர்களும் கீதாபாஷ்யத்தில் (3, 1) तस्मात् केवलात् एव ज्ञानात् मोक्षः इति एषः अर्थः निश्चितः गीतासु सर्वोपनिषत्सु च என்கிறார். அதாவது, " ஆகவே, ஞானம் ஒன்றினாலேயே மோக்ஷம் என்ற விஷயமானது பகவத்கீதையிலும் எல்லா உபநிஷத்துக்களிலும் ஸித்தாந்தம் செய்யப்பட்டிருக்கிறது." (ஆசார்ய. 1, 305.)

सुरमन्दिरतरुमूलनिवासः शय्या भूतलमजिनं वासः ।
सर्वपरिग्रहभोगत्यागः कस्य सुखं न करोति विरागः ॥ भज ॥

18. ஸுர-மந்திர-தரு-மூல-நிவாஸ: ஶய்யா பூதலமஜினம் வாஸ:
ஸர்வ-பரிக்ரஹ-போக-த்யாக: கஸ்ய ஸுகம் ந கரோதி
விராக: ॥ (பஜ)

सुर-मन्दिर-तरु-मूल-निवासः தேவ ஆலயங்களிலும் மரங்களின் அடியிலும் வாஸம் செய்தல் भूतलं शय्या பூமியே படுக்கை वासः अजिनं உடுப்பது மான்தோல் सर्व-परिग्रह-भोग-त्यागः பொருள்கள் அனைத்தையும் அவற்றை அனுபவிப்பதையும் விட்டுவிடுதல் (ஆகிய) विरागः ஆசையின்மை कस्य எவனுக்குத்தான் सुखं சுகத்தை न करोति செய்கிறதில்லை. (சுகத்தையே செய்யும் என்பது பொருள்).

योगरतो वा भोगरतो वा सङ्गरतो वा सङ्गविहीनः ।
यस्य ब्रह्मणि रमते चित्तं नन्दति नन्दति नन्दत्येव ॥ भज ॥

19. யோகரதோ வா போகரதோ வா
ஸங்கரதோ வா ஸங்கவிஹீன: ।
யஸ்ய ப்ரஹ்மணி ரமதே சித்தம்
நந்ததி நந்ததி நந்தத்யேவ ॥ (பஜ)

**योग-रतः वा** யோகாப்யாஸத்தில் ரமிப்பவனாய் இருந்தாலும், **भोग-रतः वा** போகத்தில் ரமிப்பவனாய் இருந்தாலும், **सङ्ग-रतः वा** ஸங்கத்திலே ரமிப்பவனாய் இருந்தாலும் **सङ्ग-विहीनः वा** ஸங்கத்தைவிட்டு ஏகாந்தத்தில் இருந்தாலும் **यस्य** எவனுடைய **चित्तं** மனஸானது **ब्रह्मणि** பரப்பிரும்மத்தினிடத்தில் **रमते** ரமித்துக்கொண்டு இருக்கிறதோ (**सः** அவன்) **नन्दति नन्दति नन्दति एव** நிச்சயமாக ஆனந்தத்தை அடைகிறான்.

"யோகத்தில் இருப்பவரும் வைராக்கியத்தில் இருப்பவரும் எப்பொழுதும் ஆனந்தப்படுகிறார்கள் என்பதில் சந்தேகம் இல்லை; பிரும்மத்தில் நிலைத்தவருக்கு போகமோ ஸங்கமோ இருந்தாலும், அவை அவைகளுக்கு உரிய வினையை உண்டாக்குவதில்லை" என்பது பொருள்.

**भगवद्गीता किंचिदधीता गङ्गाजललवकणिका पीता ।**
**सकृदपि येन मुरारिसमर्चा क्रियते तस्य यमेन न चर्चा ॥ भज ॥**

20. ஹ்ஹவத்-கீதா கிஞ்சிதீதா ஹங்ஹா-ஜல-லவ-கணிகா பீதா |
ஸக்ருதபி யேன முராரி-ஸமர்(ச்)சா க்ரியதே தஸ்ய யமேந ந
சர்(ச்)சா || (ஹஜ)

**येन** எவனால் **भगवद्गीता** பகவத்கீதையானது **किंचित् अधीता** கொஞ்சமேனும் அத்யயனம் செய்யப்பட்டிருக்கின்றதோ **गङ्गा-जल-लव-कणिका पीता** (எவனால்) கங்கா ஜலத்தில் ஒரு திவலையாவது பானம்பண்ணப்பட்டிருக்கின்றதோ **सकृत् अपि** ஒரு தடவையாவது **मुरारि-समर्चा क्रियते** (எவனால்) (முரனுக்கு சத்துருவாய்) முரனை ஸம்ஹரித்த ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் ஆராதனம் நன்றாக செய்யப்படுகின்றதோ, **तस्य** அவனுக்கு **यमेन** யமனோடு **चर्चा** தகராறு **न** இல்லை.

பகவத் கீதையின் மகிமை—மஹாயுத்தம் நடக்கும்பொழுது அர்ஜுனனை வைத்துக்கொண்டு ஞானோபதேசம்

செய்தார். சரீரஹானி வரும்போது ஞானோபதேசத்தைச் செய்துகொண்டிருந்தார். அவரே உத்தம குரு. அவருடைய உபதேசமே உத்தமசாஸ்திரம். அதைக் கேட்டவனே உத்தம சிஷ்யன். (ஆசார்ய. 1,296). உலகத்தில் யார் எவ்விதக் கேள்வியைக் கேட்டாலும் அதற்கெல்லாம் தகுந்த பதில் கீதாசாஸ்திரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

"सर्वोपनिषदो गावो दोग्धा गोपालनन्दनः ।
पार्थो वत्सः सुधीर्भोक्ता दुग्धं गीतामृतं महत् ॥"

எல்லா உபநிஷத்துக்களும் பசுக்களாம். அவைகளைக் கறப்பவர் ஸ்ரீ கிருஷ்ண பகவான். அப்பசுக்களின் கன்று அர்ஜுனன். அப்பசுக்களிடம் கறந்த பால் கீதை என்பதாகும். பாலைக் குடிப்பவர்கள் வித்துவான்கள். (ஆசார்ய. 1, 7-8). ஸ்ரீ ஆதி ஆசார்யர்கள் கீதாபாஷ்யத்தில் '**गीताशास्त्रं समस्तवेदार्थसारसंग्रहभूतम्**—கீதை ஸமஸ்த வேதங்களின் அர்த்தங்களுடைய ஸாரத்தைத் திரட்டியது' என்று கூறியுள்ளார்கள். 'ஜன்மம் இல்லாமல் செய்வதற்கு கீதாசார்யனாகிய பார்த்தஸாரதியும் அதற்கு பாஷ்யம் செய்த ஸ்ரீ பகவத்பாதர்களும் ஒரேவிதமான அபிப்பிராயத்தைச் சொல்லியிருக்கிறார்கள்' (ஆசார்ய. 1,307).

**पुनरपि जननं पुनरपि मरणं पुनरपि जननीजठरे शयनम् ।**
**इह संसारे बहुदुस्तारे कृपयाऽपारे पाहि मुरारे ॥ भज ॥**

21. புனரபி ஜனனம் புனரபி மரணம்
புனரபி ஜனனீ-ஜ௦ரே ஶயனம் |
இஹ ஸம்ஸாரே பஹு-து-ஸ்தாரே
க்ருபயா' (அ) பாரே பாஹி முராரே ‖ (பஜ)

**पुनः अपि** மறுபடியும் **जननं** பிறப்பு; **पुनः अपि** மறுபடியும் **मरणं** இறப்பு; **पुनः अपि** மறுபடியும் **जननी-जठरे शयनं** தாயின் வயிற்றில் படுத்தல் (கர்ப்ப வாஸஞ் செய்தல்); **इह** இந்த

**बहु-दुस्तारे** தாண்டுவதற்கு மிகவும் சிரமமானதும் **अपारे** கரையில்லாததுமான **संसारे** ஸம்ஸாரம் என்னும் ஸாகரத்திலிருந்து (हे) **मुरारे** முரனை ஸம்ஹாரம் செய்த ஏ கிருஷ்ணா ! **कृपया** கிருபையால் **पाहि** (என்னைக்) காப்பாற்று.

**रथ्याचर्पटविरचितकन्थः पुण्यापुण्यविवर्जितपन्थः ।**
**योगी योगनियोजितचित्तो रमते बालोन्मत्तवदेव ॥ भज ॥**

22. ரத்யா-சர்(ப்)பட-விரசித-கந்தஃ
புண்யாபுண்ய-விவர்ஜித-பந்தஃ |
யோகீ யோக-நியோஜித-சித்தோ
ரமதே பாலோன்மத்தவதேவ ॥ (பஜ)

**रथ्या-चर्पट-विरचित-कन्थः** வீதியில் கிடக்கும் கந்தைத் துணியாலே செய்யப்பட்ட ஆடையை உடையவரும் **पुण्य-अपुण्य विवर्जित-पन्थः** புண்யம், பாவம் இவ்விரண்டையும் விட்ட (மோக்ஷ) மார்க்கத்தில் இருப்பவரும் **योग-नियोजित-चित्तः** யோகத்தில் செலுத்தப்பட்ட சித்தத்தை உடையவருமான **योगी** யோகியானவர் **बाल-उन्मत्तवत् एव** பாலன் பித்தன் இவர்களைப்போலவே **रमते** (பிரும்மத்தினிடத்தில்) ரமிக்கிறான்.

**कस्त्वं कोऽहं कुत आयातः का मे जननी को मे तातः ।**
**इति परिभावय सर्वमसारं विश्वं त्यक्त्वा स्वप्नविचारम् ॥ भज ॥**

23. கஸ்த்வம் கோ'ஹம் குத ஆயாதஃ கா மே ஜனனீ கோ மே தாதஃ |
இதி பரிபாவய ஸர்வமஸாரம் விச்வம் த்யக்த்வா ஸ்வப்ன-
விசாரம் ॥ (பஜ)

**स्वप्न-विचारं** ஸ்வப்னத்திற்கு ஸமானமானதும் **असारं** ஸாரமில்லாததுமான **सर्वं** ஸமஸ்தமான **विश्वं** உலகத்தையும் **त्यक्त्वा** விட்டுவிட்டு, **त्वं कः** நீயார் ? **अहं कः** நான் யார் ? **कुतः आयातः** எங்கிருந்து வந்தவன் ? **मे जननी का** என்னுடைய தாயார் யார் ? **मे तातः कः** என்னுடைய தகப்பனார் யார் ? **इति** என்று **परिभावय** விசாரணை செய் (பரிசிலனைசெய்).

**त्वयि मयि चान्यत्रैको विष्णुः व्यर्थं कुप्यसि मय्यसहिष्णुः ।**
**सर्वस्मिन्नपि पश्यात्मानं सर्वत्रोत्सृज भेदाज्ञानम् ॥ भज ॥**

24. த்வயி மயி சான்யத்ரைகோ விஷ்ணுஃ
வ்யர்த்தம் குப்யஸி மய்யஸஹிஷ்ணுஃ |
ஸர்வஸ்மின்னபி பச்யாத்மானம்
ஸர்வத்ரோத்ஸ்ருஜ பேதாஜ்ஞானம் ॥ (பஜ)

**त्वयि** உன்னிடத்திலும் **मयि** என்னிடத்திலும் **अन्यत्र च** மற்ற இடத்திலும் **एकः विष्णुः (अस्ति)** ஒரே விஷ்ணுவானவர் (ஸர்வ வியாபியாக இருக்கிறார்); (அப்படி இருக்க) **असहिष्णुः** பொறுமையற்றவனாய் **मयि** என்னிடத்தில் **व्यर्थं** வீணாக **कुप्यसि** கோபஞ் செய்கிறாயே, ஏன்? **सर्वस्मिन् अपि** எல்லாப் பொருளிலும் **आत्मानं** தன் ஸ்வரூபத்தையே **पश्य** பார்; **सर्वत्र** எவ்விடத்திலேயும் **भेद-अज्ञानं** பேதமாகிற அஜ்ஞானத்தை **उत्सृज** விட்டுவிடு.

விஷ்ணுத்வம் : ஈச்வரபாவனை.

'உலகம் முழுமையும் பரமாத்மா தான்' என்று சாஸ்திரம் சொல்லுகிறது. எல்லாம் பரமாத்மாவாகி விடும் பொழுது, நாம் மாத்திரம் வேறாக இருப்பதற்கில்லை. ஆனால் 'நாம்' என்று ஒன்று தோன்றுகிறது. அதையும் பரமாத்மாவின் ஸ்வரூபத்தில் கரைத்துவிடவேண்டும். 'நாம்' என்பது வேறாக இல்லாதுபோவது தான் அத்வைதம். பழுதையைப் பாம்பு என்று நினைத்தோம். பாம்பு இல்லை என்று தெரியும்போது பழுதை தான் இருக்கிறது. அப்படியே 'நாம்' இல்லையானால், உள்ளது பரமாத்மா தான். அத்வைதத்தில் அகம்பாவம் தொலைகிறது. 'நாம்' என்பது போய்விடுகிறது. எல்லாம் பரமாத்மாவாகிவிடுகிறது. (ஆசார்ய. 3. 14-15).

**शत्रौ मित्रे पुत्रे बन्धौ मा कुरु यत्नं विग्रहसन्धौ ।**
**भव समचित्तः सर्वत्र त्वं वाञ्छस्यचिराद्यदि विष्णुत्वम् ॥ भज॥**

25. ஶத்ரௌ மித்ரே புத்ரே பந்தௌ
மா குரு யத்னம் விக்ரஹ-ஸந்தௌ |
பவ ஸமசித்தஃ ஸர்வத்ர த்வம்
வாஞ்சஸ்யசிராத்-யதி விஷ்ணுத்வம் || (பஜ)

**शत्रौ** சத்துருவிடத்திலும் **मित्रे** மித்திரனிடத்திலும் **पुत्रे** புத்திரனிடத்திலும் **बन्धौ** பந்துவினிடத்திலும் **विग्रह-सन्धौ** சண்டையிலும் ஒன்று சேர்ந்து இருத்தலிலும் **यत्नं मा कुरु** பிரயத்தினத்தைச் செய்யாதே; **अचिरात्** சீக்கிரமாக **विष्णुत्वं** விஷ்ணுத் தன்மையை **वाञ्छसि यदि** விரும்புவாயானல் **त्वं** நீ **सर्वत्र** எல்லாவிடத்திலும் **समचित्तः** ஸமமான எண்ணத்துடன் கூடியவனாய் **भव** இரு.

कामं क्रोधं लोभं मोहं त्यक्त्वाऽऽत्मानं भावय कोऽहम् ।
आत्मज्ञानविहीना मूढास्ते पच्यन्ते नरकनिगूढाः ॥ भज ॥

26. காமம் க்ரோதம் லோபம் மோஹம்
த்யக்த்வா''(ஆ)த்மானம் பாவய கோ'(அ)ஹம் |
ஆத்மஜ்ஞான-விஹீனா மூடாஸ்-
தே பச்யந்தே நரகநிகூடாஃ || (பஜ)

**कामं** காமத்தையும் **क्रोधं** கோபத்தையும் **लोभं** லோபத்தையும் **मोहं** மோகத்தையும் **त्यक्त्वा** விட்டுவிட்டு **अहं** நான் **कः** யார் (என்று) **आत्मानं** உன்னை **भावय** விசாரணை செய்துகொள். **आत्म-ज्ञान-विहीनाः** ஆத்ம ஞானம் இல்லாதவர்கள் **मूढाः** மூடர்களே ; **ते** அவர்கள் **नरक-निगूढाः** ஸம்ஸாரமாகிய நரகத்தில் வெகுகாலம் வைக்கப்பட்டு **पच्यन्ते** துன்புறுத்தப் படுகிறார்கள். (ஞானமில்லாதவர்கள் ஸம்ஸாரம் என்கிற ஸாகரத்தைத் தாண்டுகிறதில்லை என்பது பொருள்.)

இங்கு **भावय कोऽहं** என்றவிடத்தில் **पश्यत सोऽहम्** என்ற பாடமும் உண்டு. "ஜீவனாகிய நான் அந்த பரமாத்மாவே தான் என்று அறிந்து அனுபவியுங்கள்" என்று பொருள்.

**காமம்—குரோதம்**

மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டும் என்று ஆசையிருக்கிறது. அதை அடைய பிரயத்தினம் செய்கிறான். நியாய

மான வழியில் அகப்படாவிட்டால் அநியாயமான வழியில் முயற்சி செய்கிறான். அது பாபம். அந்த பாபத்திற்குக் காரணமாய் இருப்பது 'வேண்டும்' என்னும் ஆசை. அதைத் தான் 'காமம்' என்று சொல்லுவார்கள். அது நமக்கு ஒரு சத்துரு. மற்றொன்று இருக்கிறது; அது 'க்ரோதம்' —கோபம். ஒரு வஸ்துவின்மேல் ஆசைப்பட்டால் அது கிடைக்காதபொழுது அதற்குத் தடையாக இருந்தவர்கள் மேல் குரோதம் உண்டாகிறது. ஆசைப்பட்ட பொருள் கிடைக்காத பொழுது கோபம் உண்டாகிறது. காமம் திருப்பப்பட்ட பொழுது கோபமாகிறது. ஆதலால் இரண்டையும் ஒன்றென்றே சொல்லிவிடலாம். **स एष कामः प्रतिहतः केनचित् क्रोधत्वेन परिणमते** (3, 37) என்று கீதாபாஷ்யத்தில் ஸ்ரீ ஆதி ஆசார்யர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஒருஸமயம் காமமாக இருப்பதே கோபமாக மாறுகிறது. (ஆசார்ய. 1. 49-50.)

**गेयं गीतानामसहस्रं ध्येयं श्रीपतिरूपमजस्रम् ।**
**नेयं सज्जनसङ्गे चित्तं देयं दीनजनाय च वित्तम् ॥ भज ॥**

27. கேயம் கீதா-நாமஸஹஸ்ரம் த்யேயம் ஸ்ரீபதி-ரூபமஜஸ்ரம் |
நேயம் ஸஜ்ஜன-ஸங்கே சித்தம் தேயம் தீனஜனாய ச வித்தம் ||
(பஜ)

**गीता-नामसहस्रं** பகவானால் உபதேசிக்கப்பட்ட பகவத் கீதையும் பகவானைக் குறித்துச் சொல்லும் விஷ்ணு ஸஹஸ்ர நாமமும் **गेयम्** ஸதா படனம் செய்யப்படவேண்டும்; **श्रीपति-रूपं** லக்ஷ்மீ காந்தனான ஸ்ரீ கிருஷ்ணபகவானின் ரூபம் **अजस्रं ध्येयम्** எப்பொழுதும் தியானஞ்செய்யப்படவேண்டும். **सत्-जन सङ्गे** ஸாது ஜனங்களின் கூட்டத்திலே **चित्तं** மனதானது **नेयम्** வைக்கப்பட வேண்டும். **दीन-जनाय च** ஏழை ஜனங்களுக்கும் **वित्तं** பொருள் **देयम्** கொடுக்கப்படவேண்டும்.

ஸஹஸ்ரநாமாவின் மஹிமை :

பகவானுக்குப் பல நாமாக்கள் இருக்கின்றன; 'பேராயிரம் பரவி வானோர் ஏத்தும் பெம்மானே' என்று பெரிய

வர்கள் சொல்லி யிருக்கிறார்கள். ஆயிரம் நாமாவைச் சொல்லவேண்டும்; ஒரு நாமாவை ஆயிரம் தடவை சொல்ல வேண்டும்; ஸித்திபெற்ற பெரியவர்களிடத்தில் அந்த நாமாவைக் கேட்டுக்கொள்ளவேண்டும் (ஆசார்ய. 1, 54).

**सुखतः क्रियते रामाभोगः पश्चाद्धन्त शरीरे रोगः ।**
**यद्यपि लोके मरणं शरणं तदपि न मुञ्चति पापाचरणम् ॥ भज ॥**

28. ஸுகதః க்ரியதே ராமாபோகః
பஶ்சாத்(ஹ)ந்த ஶரீரே ரோகః |
யத்யபி லோகே மரணம் ஶரணம்
ததபி ந முஞ்சதி பாபாசரணம் || (பஜ)

**रामा-भोगः** ஸ்திரீயோடு சேர்க்கையானது **सुखतः** சுகமாக **क्रियते** செய்யப்படுகிறது; **पश्चात्** அதற்குப் பிந்திய காலத்தில் **हन्त** ஐயோ **शरीरे** சரீரத்தில் **रोगः** வியாதி (உண்டாகிறது); **लोके** லோகத்தில் **मरणं** சாவானது **शरणं यदि अपि** புகலிடம் நிச்சயமாயினும் **तत् अपि** அப்படியிருந்தும் **पाप-आचरणं** பாபம் செய்வதை **न मुञ्चति** விடுகிறதில்லை.

**अर्थमनर्थं भावय नित्यं नास्ति ततः सुखलेशः सत्यम् ।**
**पुत्रादपि धनभाजां भीतिः सर्वत्रैषा विहिता रीतिः ॥ भज ॥**

29. அர்த்தமனர்த்தம் பாவய நித்யம்
நாஸ்தி ததः ஸுகலேஶः ஸத்யம் |
புத்ராதபி தன-பாஜாம் பீதிः
ஸர்வத்ரைஷா விஹிதா ரீதிः || (பஜ)

**अर्थं** செல்வத்தை **अनर्थं** பிரயோஜனமில்லாததாக **नित्यं** எப்பொழுதும் **भावय** எண்ணிக்கொள்; **ततः** அந்தப் பொருளாலே **सुख-लेशः** சிறிது சுகமும் **न अस्ति** இல்லை; **सत्यम्** இது ஸத்யமே. **पुत्रात् अपि** பிள்ளையிடத்தினின்றுங்கூட **धनभाजां** பணம் படைத்தவர்களுக்கு **भीतिः** பயம் (இருக்கின்றது); **सर्वत्र** எங்கும் **एषा रीतिः विहिता** இந்த முறையே (லோக ரீதி) நடப்பு இருந்து வருகிறது. (பணத்தை ஆட்கொல்லி என்று சொல்லுவார்கள்.)

“ பணத்தை வைத்துக்கொண்டு புண்ணியத்தை சம்பாதிக்க வேண்டும். அறிவில்லாதவன் பாபத்தைத் தான் ஸம்பாதிப்பான். ‘பாபம் ஸம்பாதிக்கும் அனர்த்தத்திற்குத் தான் அர்த்தம் உபயோகப்படுகிறது’ என்று நமது ஆசார்யர்கள் இந்த சுலோகத்தில் சொல்லியிருக்கிறார்கள். **स मेन्द्रो मेधया स्पृणोतु। ततो मे श्रियम् आवह।** (தைத்திரீய உபனிஷத்) ‘ஸ்ரீயைக் கொடு’ என்று இதில் சொல்லப்படுகிறது; அதற்கு முன்னே ‘புத்தியைக் கொடு’ என்று பிரார்த்தித்து, அப்புறம் ‘ஸ்ரீயைக் கொடு’ என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸ்ரீ ஆதி ஆசார்யர்கள் இதற்கு பாஷ்யம் செய்கையில் ‘**एवमादीनि कुर्वाणा श्रीर्या तां ततो मेधानिर्वर्तनात् परम् आवह आनय। अमेधसो हि श्रीः अनर्थायैवेति** மேதையில்லாதவனுக்கு ஸ்ரீயைக் கொடுத்தால் அனர்த்தம் உண்டாகும்” என்று எழுதியிருக்கிறார்கள்”. (ஆசார்ய. 1,484.)

**प्राणायामं प्रत्याहारं नित्यानित्यविवेकविचारम् ।**
**जाप्यसमेतसमाधिविधानं कुर्ववधानं महदवधानम् ॥ भज ॥**

30. *ப்ராணாயாமம் ப்ரத்யாஹாரம் நித்யா(அ)நித்ய-விவேக-விசாரம் |*
*ஜாப்ய-ஸமேத-ஸமாதி-விதானம் குர்வவதானம் மஹதவ-*
*தானம் ॥ (ஹஜ)*

**प्राणायामं** (யோக சாஸ்திரப்படி) பிராணாயாமத்தையும் **प्रत्याहारम्** பிரத்யாஹாரத்தையும் **नित्य-अनित्य-विवेक-विचारं** நித்தியப்பொருள் அநித்தியப்பொருள் என்று பகுத்தறிவதாகிய விசாரணையையும் **जाप्य-समेत-समाधि-विधानं** (யோக சாஸ்திரப்படி) ஜபத்தோடுகூடிய ஸமாதியின் முறையையும் **महत्-अवधानं** பெரும் ஜாக்ரதையாக **अवधानं कुरु** சித்தத்திலே நிறுத்து.

**ப்ராணாயாமம், ப்ரத்யாஹாரம், ஸமாதி—யோகம்** என்பது எட்டு அங்கத்தை உடையது. மேற்கூறியவை அந்த எட்டில் மூன்று அங்கமாகும். **யோகம்** என்றால் மனதை நிறுத்துதல் என்று

பதஞ்சலி யோகசூத்திரத்தில் சொல்லுகிறார். நமக்கு மனதை அடக்காததால்தான் எல்லாவித கஷ்டங்களும் உண்டாகின்றன. பந்தத்திற்கும் மோக்ஷத்திற்கும் மனதுதான் காரணம். (ஆசார்ய. 1, 132-136.)

गुरुचरणाम्बुजनिर्भरभक्तः संसारादचिराद्भव मुक्तः ।
सेन्द्रियमानसनियमादेवं द्रक्ष्यसि निजहृदयस्थं देवम् ॥ भज ॥

31. குருசரணம்புஜ-நிர்ஹரஹக்தஃ
ஸம்ஸாராதசிராத் ஹவ முக்தஃ |
ஸேந்த்ரிய-மானஸ-நியமாதேவம்
த்ரக்ஷ்யஸி நிஜஹ்ருதயஸ்தம் தேவம் ‖ (ஹஜ)

**गुरु-चरण-अम्बुज-निर्भर-भक्तः** குருநாதனுடைய பாதாரவிந்தங்களில் மிகவும் தீவ்ரமான அடங்காத பக்தியை உடையவனாகி **संसारात्** ஸம்ஸாரத்தினின்று **अचिरात्** சீக்கிரமாகவே **मुक्तः** விடுபட்டவனாய் **भव** இரு; **एवं** இதற்கு முன் சுலோகங்களால் உபதேசிக்கப்பட்ட பிரகாரம் **सेन्द्रिय-मानस-नियमात्** இந்திரியங்களையும் மனதையும் அடக்கி **निज-हृदयस्थं देवं** உன்னுடைய ஹ்ருதயத்தில் இருக்கும் பரமாத்மாவை **द्रक्ष्यसि** பார்ப்பாய்.

குருவின் மகிமை.

குருவின் மகிமையைப்பற்றி அதிகம் கூறவேண்டியது இல்லை. நமது வேதமானது 'குருவை தெய்வமாகக் கொள்' என்று உபதேசித்திருக்கிறது; (ஆசார்ய. 3, 13). குருவே பரப்ரும்ம ஸ்வரூபம். "ஈச்வரனால் விதிக்கப்பட்ட கர்மாவால் மனதை உழுதானபின், ஜலம் பாய்ச்சவேண்டும். அது தான் பக்தி. ஆசார்யபக்தி ஈச்வரபக்தியைவிட அதிகமானது. குருபக்தியிருந்தால் மனது தானாக சாந்தத்தை அடையும். மனதானது குருபக்தியில் நனைந்தால், உடனே பலன் உண்டாகும்." (ஆசார்ய. 1, 240).

குருமூலமாகத் தான் சிவஸ்வரூபத்தை அறிந்து கொள்ள வேண்டும். சிவனை விட குரு சிரேஷ்டமானவர். '**शिवे रुष्टे गुरुस्त्राता गुरौ रुष्टे न कश्चन**' (ஸூதஸம்ஹிதை);

சிவனுக்கு அபசாரம் செய்தால், அந்த அபசாரத்தை குரு மன்னிப்பார். ஆனால் குருவுக்குச் செய்த அபசாரத்தை (சிவன் உள்பட) யாரும் மன்னிக்க மாட்டார்கள். ஆகையால் எந்தக் காரியத்தைச் செய்தாலும் "ஸ்ரீ குருப்யோ நமஃ" என்று சொல்லி ஆரம்பிக்க வேண்டும். அதனாலே தான் ஸ்ரீ ருத்ரத்தில் "நமஃ ஶங்கராய ச" என்று குரு வந்தனம் சொல்லி, அப்புறம் பஞ்சாக்ஷரம் சொல்லப்பட்டு இருக்கிறது (ஆசார்ய. 2, 114).

பகவான்-பகவத்பாதம்-பகவத்பாதர்கள்.

பரமேசுவரர்தான் உத்க்ருஷ்டமான வஸ்து. அவருடைய பாதம் நமக்கு உத்கிருஷ்டமானது. அந்தப் பாதத்தில் தான் மனதை வைக்கவேண்டும். பகவத்பாத ஸ்வரூபம் தான் ஸ்ரீ ஆசார்ய ஸ்வாமிகள். அவர்களை தியானம் செய்வதே பரமேசுவராருடைய சரணாரவிந்தத் தியானம் ஆகும். (ஆசார்ய. 1, 302).

ஆகையால் நாம் நம்முடைய மனது சுத்தமாக இருப்பதற்காக, நித்ய சிரேயஸை அடைவதற்காக, பகவத் பாதத்தை, அதாவது, ஆசார்யரூபமான சரணத்தை, தியானம் பண்ணவேண்டும். மனது அதற்குத் தான் ஏற்பட்ட இடம். (ஆசார்ய. 1,306).

கோவிந்த பகவத்பாதர்கள் ஸ்ரீ ஆதி ஆசார்யர்களுடைய குரு; தங்களுடைய குருவைத் தியானம் செய்யும் பொருட்டும் நமது ஆசார்யர்கள் பஜகோவிந்தம் என்ற கிரந்தத்தைச் செய்தார்கள். அதில் மஹாவிஷ்ணுவின் பெயரும் ஆசார்யர்களுடைய குருவின் பெயரும் கலந்து வருகின்றன. (ஆசார்ய, 3, 119.)

॥ इति मोहमुद्गरः संपूर्णः ॥

॥ ओम् ॥ शुभम् अस्तु ॥ ओम् तत् सत् ॥

ஸ்ரீ குருப்யோ நம:

# ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்

ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் பாஷ்யத்திற்கு
வே. நாராயணன், எழுதிய தமிழ் அனுவாதத்துடன் கூடியது.

**திருந்திய இரண்டாம் பதிப்பு விலை 1–4–0. தபாற் செலவு 0–4–0.**

உலகம் எங்கும் சங்கடமான நிலைமை எற்பட்டிருக்கிறது; இப்போது பொதுஜனங்கள் செய்யவேண்டியது என்ன? அவர்கள் நன்மை பெறுவது எப்படி? லோக க்ஷேமத்தை நாடி அவர்கள் என்ன செய்யலாம்?

இந்தக் கேள்விகளுக்கு விடையாக அமைந்தது ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரம். பக்தியோடு இந்த ஸ்தோத்ரத்தைப் பாராயணஞ் செய்தால் இவ்வுலகிலே சுகமாக வாழலாம்; மேலுலகிலும் சுகத்தைப் பெறலாம்; பயம் நீங்கிவிடும்; வந்த ஆபத்து விலகிப்போம்; நோய் பீடிக்காது; எல்லா இடையூறுகளையும் சுலபமாகக் கடந்து விடலாம்; சுகம் உண்டு, செல்வம் உண்டு, புகழ் உண்டு. கோபம், லோபம், மோஹம் முதலிய துர்க்குணங்கள் நம்மைவிட்டு நீங்கிவிடும். பொறுமை, தைர்யம், வீர்யம், தேஜஸ் முதலிய குணங்கள் நம்மிடம் விளங்கும். 'இது வெறும் வார்த்தையன்று, உண்மையே' என்று ஸ்ரீசங்கர பகவத் பாதர்கள் உறுதி கூறுகிறார்கள்.

பாராயணத்திலே சிரத்தைவேண்டும். அதற்கு அனுகூலமாக, ஸஹஸ்ர நாமங்களுக்கும் ஸ்ரீ சங்கர பகவத் பாதர்கள் பாஷ்யஞ் செய்திருக்கிறார்கள். விஷ்ணுவின் நாமாக்களை ஸங்கீர்த்தனஞ் செய்வதால் பரிபூர்ண ஞானம் உண்டாகும் என்றும் புராண புருஷனை ஸ்துதிப்பவர்கள் உண்மை ஞானிகளாகிறார்கள் என்றும் கூறுகிறார்கள்.

கண்ணைக் கவரும் அழகிய மூன்று வர்ணப் படங்களும் 248 பக்கங்களும் கொண்ட இந்தப் புத்தகத்திற்கு மிகவும் குறைந்த விலை ரூ. *1—4—0*

கிடைக்குமிடம்:
ஸ்ரீ காமகோடி கோசஸ்தானம்,
57, மேல டபீர் தெரு, கும்பகோணம்.

The Liberty Press, Madras.